ஆண்டு மாணவர்கள் படிப்பதற்கு அனுமதி வழங்குவதற்கான தகுதியைப் பெற அனைத்துக் கட்டுமானப் பணிகளும் முடிக்கப்பட்டுவிட்டன. எனவே, இந்திய மருத்துவக் குழுவினுடைய ஒப்புதலைத்தான் நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். வேண்டுமானால், நீங்கள் எல்லாம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அந்த மருத்துவக் குழுவினுடைய ஆய்வுத் தேதியைக் குறிப்பிட்டு, அவர்கள் இங்கே வந்து ஆய்வு செய்வதற்கான தேதியைக் குறிப்பிடச் சொல்லி அவர்களுக்கு மீண்டும் நாங்கள் அரசின் சார்பிலே கடிதம் எழுதவிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக் கல்லூரிக்கு முந்தைய ஆண்டே 1997 ஆம் ஆண்டே வேலூரில் அரசு மருத்துவக் கல்லூரியைத் தொடங்குவதற்கான....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தனிக் கேள்வி போடுங்கள்.

வினா எண் 26, திரு. இரா.தா. இன்பத் தமிழன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

26—

நோயாளிகளைக் கவனித்தல்

***966—திரு. இரா.தா. இன்பத் தமிழன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் அரசு மருத்துவமனையில் அரசு மருத்துவர்கள் இருந்தும், நோயாளிகளைச் சரிவரக் கவனிக்காமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2002 மார்ச் 14]

(அ) திருவில்லிப்புத்தூர் அரசு மருத்துவமனையில் ஏற்கெனவே இருந்து வந்த நிலைமை முற்றிலுமாக மாறி, தற்போது சிகிச்சைக்கு வரும் அனைத்து நோயாளிகளுக்கும் மருத்துவர்களால் உரிய முறையில் சிறப்பான சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா.தா. இன்பத் தமிழன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவில்லிப்புத்தூர் அரசு மருத்துவமனையில் தினந்தோறும் 800 முதல் 1000 நோயாளிகள் வந்து சிகிச்சை பெற்றுக்கொண்டு சென்றுகொண்டு இருக்கிறார்கள். கடந்த தி.மு.க. ஆட்சியில் வெறும் 4 டாக்டர்கள் மட்டுமே இருந்தார்கள். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் சுகாதாரத் துறை அமைச்சர் அண்ணன் அவர்கள் ஆய்வு செய்ய வந்திருந்தார்கள். ஆய்வு செய்ய வந்துவிட்டுச் சென்றவுடன், அங்கு மேற்கொண்டு 5 டாக்டர்கள் போடப்பட்டு, நல்ல முறையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் 2 டாக்டர்கள் அங்கு குறைவாக உள்ள காரணத்தினால், அதாவது ஒரு ஆர்த்தோ டாக்டரும், ஒரு எம்.எஸ்.,டி.சி.எச். மற்றும் குழந்தைகள் நல மருத்துவர் ஒருவரையும் போட்டுத் தரும்படி புரட்சித் தலைவி அம்மா அவர்களையும், சுகாதாரத் துறை அமைச்சரையும் பணிவன்போடு கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் கூடுதலாக அந்த மருத்துவமனைக்கு எலும்பு முறிவு சிகிச்சை நிபுணரும், குழந்தைகள் பிரிவுக்கான மருத்துவரும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அப்படி அந்தப் பணியிடங்கள் இதுவரை நிரப்பப்படவில்லை என்று சொன்னால், நிச்சயமாக அந்தப் பணியிடங்கள் விரைவிலே நிரப்பப்படும். நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்பதற்கு முன்பு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல, டாக்டர்களின் அக்கறையின்மையின் காரணமாக அதுபோன்ற நிலைமை இருந்தது என்னவோ உண்மைதான். ஆனால்--நம்முடைய மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அறிவுரையின்படி, நாங்கள் அரசு டாக்டர்களுக்கு சில அறிவுரைகளைச் சொல்லியிருக்கிறோம். அதன்படி அவர்கள் கடமையுணர்வுடனும், சேவை மனப்பான்மையுடனும் பணியாற்ற வேண்டும். அதேபோல, மருத்துவர்கள்

நீண்ட விடுப்பிலே செல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும், அதேபோல, அவர்கள் பணி நேரம் முழுவதும் மருத்துவமனையிலேயே இருக்க வேண்டும். அதேபோல, நோயாளிகள் திருப்திப்படும் வகையிலே சிகிச்சை அளிக்க வேண்டும். பொதுமக்களிடமிருந்து எந்தவிதப் புகாரும் வராத அளவிற்கு அவர்கள் பணியாற்ற வேண்டும். இந்த அறிவுரைகளை அவர்களுக்கு வேண்டுகோளாக வைத்திருக்கிறோம். எனவே, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய இந்த நல்ல அறிவுரைகளை அரசு டாக்டர்கள் சங்கமும் ஏற்றுக்கொண்டு, இப்போது நிலைமைகள் மாறி, அவர்கள் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இதே நிலைமை நிச்சயமாகத் தொடரும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 27, திரு. ப. பொன்னம்பலம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

27—

குடிநீர் வசதி

***2094—திரு. ப. பொன்னம்பலம்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மேற்கு ஒன்றியம், அதலை பஞ்சாயத்து, பட்டகுறிச்சி, பட்டகுறிச்சி புதூர் ஆகிய கிராமங்களுக்குக் குடிநீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை மாவட்டம், மதுரை மேற்கு ஒன்றியம், அதலை பஞ்சாயத்திலுள்ள பட்டகுறிச்சி கிராமத்திற்கு 10 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மூலம் தற்போது குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தோடனேரி பஞ்சாயத்திலுள்ள பட்டகுறிச்சி புதூர் கிராமத்திற்கு 10 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. திட்டப் பணிகள் விரைவில்